AdSW

அடையாள இலக்கம்

| D | | | | |
|---|---|---|---|---|

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2025

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

# AdSW

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. கருத்தூன்றி : ____________ + ____________
2. ஆட்டுமந்தை : ____________ + ____________
3. ஐந்தாண்டு : ____________ + ____________
4. அவனிடம் : ____________ + ____________
5. விரைந்தோடினான் : ____________ + ____________

(5 புள்ளிகள்)

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**

1. அழு : ____________
2. ஒற்றுமை : ____________
3. சாதகம் : ____________
4. நியாயம் : ____________
5. போற்று : ____________

(5 புள்ளிகள்)

**(இ) கீழே தரப்பட்ட தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

1. செயற்கை நுண்ணறிவு : ____________
2. புலனம் : ____________
3. அருகலை : ____________
4. வலையொளி : ____________
5. ஊடலை : ____________

(5 புள்ளிகள்)

**(ஈ) கீழே தரப்பட்ட உதவிச் சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

| | | | |
|---|---|---|---|
| **வாழ்க்கை** | **போராட** | **முறையாக** | **விளங்கும்** |
| **தங்களுடைய** | **முதல்** | **நிர்வாகத்தில்** | |
| **பெருக்கிக்கொள்ள** | **முயற்சியால்** | **மட்டும்** | |

ஆற்றல் என்பது மக்கள் அனைவரிடத்திலும் இயல்பாகவே அமைந்திருக்கிறது. ஆனால் அதை வளர்த்துக்கொள்வதில்தான் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனர். சிறு வயது (1)____________________ கட்டுப்பாட்டுடன் ஒழுக்கமான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்களால்தான் ஆற்றலை (2)____________________ வளர்த்துக்கொள்ள முடியும். சராசரி வாழ்க்கையில் பெறும் வெற்றிக்கு இது போதும்.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் முதலில் (3)____________________ தொழிலில் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். அடுத்து, குடும்பத் தலைவர் என்ற முறையில் குடும்ப (4)____________________ ஆற்றல் மிக்கவராக விளங்க வேண்டும். இவ்விரு துறைகளிலும் ஒருவர் ஆற்றலோடு செயல்படும்போது அவருடைய (5)____________________ வெற்றிகரமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் அமைகிறது.

ஆனால் அரும்பெரும் சாதனைகளுக்கு இது (6)____________________ போதாது. ஆற்றலை மேலும் வளர்த்துக்கொள்வதோடு ஆர்வத்தோடுகூடிய அனுபவங்களையும் (7)____________________ வேண்டும். உலகத்தில் பெரிய சாதனைகள் புரிந்தோரின் வரலாறுகளை உற்றுநோக்கினால் இந்த உண்மை (8)____________________.

பெருஞ்சாதனையாளர்கள் பலரும் தங்கள் இளமைக் காலத்தில் சொல்லமுடியாத துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். எனினும் இவர்கள் தங்களுடைய கடும் (9)____________________ தம் ஆற்றலை வளர்த்துக்கொண்டு சாதனைகளைப் படைத்துள்ளனர். வசதியும் வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைக்காதபோது அவர்கள் சாதனைகள் புரிவதற்கு (10)____________________ வேண்டியிருந்தது. அப்போது அவர்கள் தங்கள் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயினர். அப்படிப்பட்ட நெருக்குதல்கள் அதிகம் பெருகியபோது அவர்களுடைய ஆற்றலும் வளர்ந்தது.

(10 புள்ளிகள்)

**(உ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.**

1. பழந்தமிழர்கள் நோய் வராமல் இருப்பதற்கு அறுசுவை **உணவை** உண்டுவந்தனர்.
   - அ) நீரை
   - ஆ) பழங்களை
   - இ) ஆகாரத்தை
   - ஈ) காற்றை
2. வீட்டிற்கு **அண்மையில்** கடைகள் இருப்பதால் பொருட்களை இலகுவாக வாங்கமுடிகிறது.
   - அ) தூரத்தில்
   - ஆ) தொலைவில்
   - இ) சமீபத்தில்
   - ஈ) வெளியில்
3. வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நாம் **முகமலர்ச்சியுடன்** வரவேற்கவேண்டும்.
   - அ) புன்முறுவலுடன்
   - ஆ) வணக்கத்துடன்
   - இ) அடக்கத்துடன்
   - ஈ) மகிழ்ச்சியுடன்
4. குதிரையைப்போலத் தோற்றமளிக்கும் கழுதை ஓட்டத்தில் குதிரைக்கு **ஈடாகுமா**?
   - அ) இணையாகுமா
   - ஆ) பொறுப்பாகுமா
   - இ) வேகமாகுமா
   - ஈ) பலமாகுமா
5. மூத்தோர் சொல் வார்த்தை கேளாதவர்கள் பல **இன்னல்களுக்கு** ஆளாவார்கள்.
   - அ) துன்பங்களுக்கு
   - ஆ) தடைகளுக்கு
   - இ) இடையூறுகளுக்கு
   - ஈ) வெறுப்புகளுக்கு
6. திறமைசாலி மாணவர்கள் திறமைகுறைந்த மாணவர்களுக்குப் பாடங்களில் **கைகொடுக்க** முன்வரவேண்டும்.
   - அ) பணம்கொடுக்க
   - ஆ) பாராட்டுத்தெரிவிக்க
   - இ) உதவிசெய்ய
   - ஈ) கைகுலுக்க
7. காலையில் **கதிரவனின்** ஒளி உடம்பில்படுவது உடலுக்கு நல்லது.
   - அ) நிலவின்
   - ஆ) சூரியனின்
   - இ) விளக்கின்
   - ஈ) மின்னலின்
8. ஆண்டுதோறும் நடைபெறும் புத்தகவிழாவைக் காணப் பெரும்திரளான மக்கள் **குழுமினர்**.
   - அ) கூடினர்
   - ஆ) வந்தனர்
   - இ) விரும்பினர்
   - ஈ) சேர்ந்தனர்
9. தாமரை இரவும் பகலும் **சோர்வில்லாது** உழைத்துத் தன் இலட்சியத்தை அடைந்தாள்.
   - அ) அயராது
   - ஆ) உறங்காது
   - இ) அஞ்சாது
   - ஈ) கணக்கில்லாது
10. உலகம் முழுவதும் உள்ள **எழில்** நிறைந்த இடங்கள் சுற்றுப்பயணிகளை ஈர்க்கின்றன.
    - அ) வளம்
    - ஆ) அழகு
    - இ) கவர்ச்சி
    - ஈ) இயற்கை

(10 புள்ளிகள்)

**(ஊ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.**

1. அரை :____________________________

2. அறை :____________________________

3. அலகு :____________________________

4. அழகு :____________________________

5. காலை :____________________________

6. காளை :____________________________

7. பலம் :____________________________

8. பழம் :____________________________

9. பனி :____________________________

10. பணி :____________________________

(20 புள்ளிகள்)

## (எ) தரப்பட்ட பகுதியைக் கருத்தூன்றிப் படித்த பின்னர் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.

கடவுள் உலகைப்படைத்தபோது ஒவ்வொரு ஜீவ ஜந்துவுக்கும் அதனுடைய வயது என்ன என்பதை நிர்ணயித்தார்.

முதலில் கழுதை அவர் முன் வந்து நின்றது. "உனக்கு நாற்பது வயது" என்றார் கடவுள். "மிக்க மகிழ்ச்சி" என்று சொல்லிவிட்டுக் கழுதை அப்பால் சென்றதும், நாய் வந்து நின்றது. "உனக்கும் நாற்பது வயது" என்றார். "மிக்க மகிழ்ச்சி" என்று சொல்லிவிட்டு நாய் அப்பால் சென்ற அடுத்த விநாடியே ஆந்தை வந்து அவர் முன் நின்றது. "உனக்கும் நாற்பது வயதுதான்" என்று சொல்லி முடிப்பதற்குள் மனிதன் கடவுள் முன் வந்து நின்றான்.

"உனக்கும் நாற்பது வயது" என்றார் கடவுள். மிக்க மகிழ்ச்சி என்றுதான் மனிதனும் சொல்வான் என்று கடவுள் எதிர்பார்த்தார். ஆனால், மனிதன் அப்படிச் சொல்லவில்லை. அதற்குப் பதில், "எல்லோரையும் போல எனக்கும் நாற்பது வயது கொடுத்திருக்கிறீர்களே! அது எப்படிப் போதும். நான் பெரியவன் ஆவதற்கே இருபது வருடங்கள் பிடிக்கும். அதற்குப் பிறகு உலக அனுபவம் பெறுவதற்கு இன்னும் இருபது வருடங்கள் பிடிக்கும். அதற்குப் பிறகு, உங்களைத் துதிப்பதற்கு எங்கே எனக்கு நேரம்" என்று சொன்னான்.

என்ன செய்யலாம் என்று கடவுள் யோசனை செய்துகொண்டிருந்த சமயம் கழுதை அங்கு வந்து சேர்ந்தது. "கடவுளே! தாங்கள் எனக்குக் கொடுத்த நாற்பது வயது அதிகம் என்று தோன்றுகிறது. மக்கள் என்னை அழுக்கு மூட்டை சுமக்கும்படி வற்புறுத்துகிறார்கள். என்னை அடித்துத் துன்புறுத்துகிறார்கள். சாப்பிடவும் ஒன்றும் கொடுப்பதில்லை. ஆகவே தயவுசெய்து என் ஆயுளைக் குறைத்து விடுங்கள்" என்று சொன்னது.

உடனே கழுதையின் வயதை இருபதாகக் குறைத்து, மீதி இருபது ஆண்டுகளை மனிதனின் ஆயுளுடன் சேர்த்தார் கடவுள். கழுதை தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு அப்பால் சென்றதுதான் தாமதம், நாய் கடவுளைப் பார்க்க வந்து சேர்ந்தது. "கடவுளே! எனக்குத் தாங்கள் கொடுத்த நாற்பது வயது அதிகம். நான் இரவெல்லாம் விழித்துக்கொண்டிருந்து என் எஜமானனின் பொருட்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. சிறு பிள்ளைகள் என்னைக் கண்டதும் கல்லை விட்டெறிகிறார்கள். ஆகவே, இந்த வாழ்க்கையை என்னால் நாற்பது வருட காலம் தாங்க முடியாது. என் ஆயுளைக் குறைத்துவிடுங்கள்" என்றது.

உடனே கடவுள் நாயின் வயதை இருபதாகக் குறைத்து மீதி இருபது வருடங்களை மனிதனின் ஆயுளோடு சேர்த்தார். தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு நாய் அப்பால் சென்றதும், ஆந்தை கடவுளைத் தேடி வந்தது. “எனக்கு ஏன் நாற்பது வயது ஆயுள் கொடுத்தீர்கள்? என்னைக் கண்டாலே சகுனத்தடை என்று சொல்கிறார்கள். பகலிலோ எனக்குக் கண்ணே தெரியவில்லை. ஆகவே, இத்தனை நீண்ட ஆயுள் எனக்கு வேண்டாம். என் ஆயுளைக் குறைத்துவிடுங்கள்” என்றது.

உடனே கடவுள், “உன் ஆயுளை இருபது வருடங்களாகச் செய்திருக்கிறேன். மீதி இருபது வருடங்களை மனிதனுக்குக் கொடுத்துவிட்டேன்!” என்றார். தனக்கு நூறு வருட ஆயுள் கிடைத்து விட்டதைக் கண்டு மனிதன் சந்தோஷப்பட்டான். ஆனால், என்ன ஆயிற்றென்றால், நாற்பது வயதிற்குப் பிறகு இருபது வருடங்கள் மனிதன் கழுதையைப் போலச் சோம்பேறியாக இருக்க ஆரம்பித்தான். பிறகு, அறுபது வயதிலிருந்து ஒரு இருபது வருட காலம் நாயைப் போலப் பிறரைப் பார்த்துக் குரைக்க ஆரம்பித்தான். பிறகு, கடைசி இருபது வருட காலம் ஆந்தையைப் போலப் பார்வையிழந்து, எல்லாராலும் இகழப்பட ஆரம்பித்தான்.

1. கழுதை, நாய், ஆந்தை ஆகிய மூன்று ஜீவராசிகளும் ஏன் கடவுள் முன் வந்து நின்றன?

______________________________

______________________________

______________________________

2. மனிதன் தனக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது குறித்து ஏன் மகிழ்ச்சி தெரிவிக்கவில்லை?

______________________________

______________________________

______________________________

______________________________

3. ஆந்தை கடவுளிடம் என்ன காரணம் கூறி தன் வயதை குறைத்துக் கொள்ளும்படி கேட்டது?

______________________________

______________________________

______________________________

______________________________

4. மனிதன் எப்பொழுது மகிழ்ச்சி அடைந்தான்?

---

---

5. மற்ற ஜீவராசிகளைவிட மனிதன் அறுபது வயது அதிகம் பெற்றிருந்தும் அவை அவனுக்குப் பயனற்றவையாகக் கருதப்படுவது ஏன்?

---

---

---

---

---

(20 புள்ளிகள்)

**(ஏ) கீழே தரப்பட்ட எழுத்து வடிவங்களில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாது பதில் எழுதுக.**

1. நீங்கள் அண்மையில் கலந்துகொண்ட பள்ளிமுகாம், அதன் செயற்பாடுகள் (activities) பற்றியும், அங்கு நீங்கள் பெற்ற அனுபவங்கள் பயன்கள் பற்றியும் விவரித்து எழுதுக.

**அல்லது**

2. சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வருங்காலத்தில் நூலகங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் பற்றி எழுதுக.

**அல்லது**

3. குடியிருப்புப் பகுதிகளில் செல்லப்பிராணிகளை வளர்ப்போர் சிலர் தங்கள் செல்லப்பிராணிகளை பொறுப்புடன் கவனிப்பதில்லை, அதனால் மற்றக் குடியிருப்பாளர்கள் பலதொல்லைகளுக்கு ஆளாகின்றனர்.
இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஆலோசனைகளை வழங்கி நகரமன்றத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

   (இவ்வினாவிற்கு விடையளிக்கும் போது உமது பெயரையும், முகவரியையும் குறிப்பிடாமல், ''கலை'' என்னும் புனைபெயரையும், 10 ஜோர்ஜ் தெரு, கம்பெல்ரவுண்-0000 என்னும் முகவரியையும் குறிப்பிடுக).

(25 புள்ளிகள்)